## ஆயக்குடி மரத்தடி இலவச பயிற்சி மையம்

## ஆறாம் வகுப்பு முதல் பருவம்

### இன்பத் தமிழ்

1. ஏற்றத் தாழ்வற்ற_____ அமைய வேண்டும்

சமுதாயம்

2. நாள் முழுவதும் வேலை செய்து களைத்தவருக்கு ____ இருக்கும்

அசதி

3. நிலவு+என்று என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்____

நிலவென்று

4. தமிழ் +எங்கள் என்பதனை சேர்த்து எழுத கிடைக்கும் சொல்_______

தமிழெங்கள்

5. அமுதென்று என்னும் சொல்லைப் பிரித்து எழுத கிடைப்பது_____

அமுது+என்று

6. செம்பயிர் எனும் சொல்லை பிரித்து எழுத கிடைப்பது______

செம்மை+பயிர்

பொருத்துக

1. விளைவுக்கு-நீர்

2. அறிவுக்கு-தோல்

3. இளமைக்கு-பால்

4. புலவருக்கு-வேல்

சொல்லும் பொருளும்

1. நிருமித்த-உருவாக்கிய

2. விளைவு-வளர்ச்சி

3. சமூகம்-மக்கள் குழு

4. அசதி-சோர்வு

நூல் வெளி

1. பாரதிதாசனின் இயற்பெயர்____

சுப்புரத்தினம்

2. பாரதியாரின் கவிதைகள் மீது கொண்ட பற்றின் காரணமாக தன் பெயரை பாரதிதாசன் என மாற்றிக் கொண்டவர்________

சுப்புரத்தினம்

3. பாரதிதாசன் தம் கவிதைகளில் பெண் கல்வி கைம்பெண் மறுமணம் பொதுவுடமை மற்றும்______முதலான புரட்சிகரமான கருத்துக்களை பாடுபொருளாக பாடினார்

பகுத்தறிவு

4. புரட்சிக்கவிஞர், பாவேந்தர் என்று அழைக்கப்படுபவர் யார்______

பாரதிதாசன்

5. இன்பத்தமிழ் பாரதிதாசன் கவிதைகள் என்ற நூலில்______என்னும் தலைப்பின் கீழ் இடம் பெற்றுள்ளது

தமிழ்

கற்பவை கற்றபின்:

1. "தமிழே உன்னை நினைக்கும் தமிழன் என் நெஞ்சம் இனிக்கும் இனிக்கும்" எனும் பாடலின் ஆசிரியர்

காசி ஆனந்தன்

தமிழ் கும்மி:

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

1. தாய்மொழியில் படித்தால்_____அடையலாம்

மேன்மை

2. தகவல் தொடர்பு முன்னேற்றத்தால்_____சுருங்கி விட்டது

மேதினி

3. "செந்தமிழ்" என்னும் சொல்லை பிரித்து எழுத கிடைப்பது___

செம்மை+தமிழ்

4. ”பொய்யகற்றும்” என்னும் சொல்லை பிரித்து எழுத கிடைப்பது___

பொய்+அகற்றும்

5. பாட்டு+இருக்கும் என்பதைச் சேர்த்து எழுத கிடைக்கும் சொல்___

பாட்டிருக்கும்

6. எட்டு+திசை என்பதைச் சேர்த்து எழுத கிடைக்கும் சொல்___

எட்டுத்திசை

## சொல்லும் பொருளும்

1. ஆழிப்பெருக்கு-கடல்கோள்
2. மேதினி-உலகம்
3. ஊழி-நீண்டதொரு காலப்பகுதி
4. உள்ளப்பூட்டு-உள்ளத்தின் அறியாமை

## நூல்வெளி:

1. பெருஞ்சித்திரனாரின் இயற்பெயர்______

மாணிக்கம்

2. பாவலரேறு என்னும் சிறப்புப் பெயரால் அழைக்கப்படுபவர்_______

பெருஞ்சித்திரனார்

3. பெருஞ்சித்திரனாரின் நூல்கள் கனிச்சாறு கொய்யாக்கனி கொத்து மற்றும்________

நூறாசிரியம்

5. பெருஞ்சித்திரனார் நடத்திய இதழ்கள் தென்மொழி தமிழ்ச்சிட்டு மற்றும்______

தமிழ் நிலம்

6. தனி தமிழையும் தமிழ் உணர்வையும் பரப்பிய பாவலர்_____

பெருஞ்சித்திரனார்

7. தமிழ் கும்மி ____ என்னும் நூலில் இடம் பெற்றுள்ளது

கனிச்சாறு

8. கனிச்சாறு எத்தனை தொகுதிகளாக வெளிவந்துள்ளது

8

## கற்பவை கற்றபின்:

1. "வான் தோன்றி வளி தோன்றி நெருப்பு தோன்றி" என்னும் பாடலின் ஆசிரியர்

வாணிதாசன்

## உரைநடை உலகம்-வளர் தமிழ்

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

1. தொன்மை என்னும் சொல்லின் பொருள்___

பழமை

2. "இடப்புறம்" என்னும் சொல்லை பிரித்து எழுத கிடைப்பது___

இடம் +புறம்

3. "சீரிளமை" என்னும் சொல்லை பிரித்து எழுத கிடைப்பது

சீர்மை+இளமை

4. சிலம்பு கூறல் அதிகாரம் என்பதை சேர்த்து எழுத கிடைக்கும்____

சிலப்பதிகாரம்

5. கணினி+தமிழ் என்பதைச் சேர்த்து எழுத கிடைக்கும் சொல்____

கணினித் தமிழ்

6. "தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" என்று பாடியவர்____

பாரதியார்

7. 'மா' என்னும் சொல்லின் பொருள்____

விலங்கு

கோடிட்ட இடத்தை நிரப்புக

1. சிந்திக்கவும் சிந்தித்ததை வெளிப்படுத்தவும் உதவுவது_____

மொழி

2. தமிழில் நமக்குக் கிடைத்துள்ள மிகப் பழமையான இலக்கண நூல்______தொல்காப்பியம்

3. மொழியை கணினியில் பயன்படுத்த வேண்டும் எனில் அது________அடிப்படையில் வடிவமைக்கப்பட வேண்டும்

எண் வடிவம்

**தெரிந்து கொள்வோம்:**

*1.* தமிழ் என்னும் சொல் முதலில் ஆளப்படும் இலக்கியம்_____

தொல்காப்பியம்

*2.* தமிழ்நாடு என்னும் சொல் முதலில் ஆளப்படும் இலக்கியம்_____

சிலப்பதிகாரம் வஞ்சிக் காண்டம்

*3.* தமிழன் என்னும் சொல் முதலில் ஆளப்படும் இலக்கியம்____

அப்பர் தேவாரம்

**கற்பவை கற்றபின்:**

*1* . "நீண்ட நீண்ட காலம் - நீ, நீடு வாழ வேண்டும்! "என்னும் பாடலின் ஆசிரியர்____

அறிவுமதி

விரிவானம்-கனவு பலித்தது

*1.* நிலம் தீ நீர் வளி விசும்போடு ஐந்தும் கலந்த மயக்கம் உலகம் ஆதலின் என்னும் வரிகள் இடம்பெற்றுள்ள நூல்______

தொல்காப்பியம்

*2.* உலக உயிர்களை ஓரறிவு முதல் ஆறறிவு வரை வகைப்படுத்தியவர்_____

தொல்காப்பியர்

*3.* ”ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடல்நீர் நாழி முகவாது நால்நாழி” என்னும் வரிகளை பாடியவர்_____

ஔவையார்

*4.* ”கடல் நீர் முகந்த கமஞ்சூழ் எழிலி” பாடல் இடம் பெற்ற நூல்____

கார் நாற்பது

*5.* ”நெடு வெள்ளூசி நெடு வசி பரந்த வடு” என்னும் பாடல் இடம் பெற்ற நூல்_____

கார் நாற்பது

*6.* ”கோட் சுறா எறிந்தென சுருங்கிய நரம்பின் முடி முதிர் பரதவர்”என்னும் வரிகள் இடம்பெற்றுள்ள நூல்_____

நற்றிணை

*7.* ”தினையளவு போதாச் சிறுபுல் நீர் நீண்ட பனையளவு காட்டும்”பாடலின் ஆசிரியர்____

கபிலர்

## இயல் *2*

**சிலப்பதிகாரம்**

சொல்லும் பொருளும்

1. திங்கள் -நிலவு

2. கொங்கு- மகரந்தம்

3. அலர் -மலர்தல்

4. திகிரி -ஆணைச் சக்கரம்

5. பொற்கோட்டு- பொன்மயமான சிகரத்தில்

6. மேரு- இமயமலை

7. நாமநீர் -அச்சம் தரும் கடல்

8. அளி -கருணை

நூல்வெளி

1. சிலப்பதிகாரத்தை இயற்றியவர்_____

இளங்கோவடிகள்

2. இளங்கோவடிகள் எந்த மரபைச் சேர்ந்தவர்____

சேர மரபு

3. இளங்கோவடிகளின் காலம்_____

கிபி இரண்டாம் நூற்றாண்டு

4. தமிழின் முதல் காப்பியம்_____

சிலப்பதிகாரம்

5. சிலப்பதிகாரத்தின் வேறு பெயர்கள்______, ______

முத்தமிழ் காப்பியம், குடிமக்கள் காப்பியம்

*6.* இரட்டைக் காப்பியங்கள்_____, _____

சிலப்பதிகாரம், மணிமேகலை

*7.* காவிரி ஆறு பாய்ந்து வளம் செய்யும் நாட்டை ஆட்சி செய்பவன்______

சோழ மன்னன்

*8.* ”மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்” பாடலின் ஆசிரியர்_____

இளங்கோவடிகள்

*9.* திங்கள், ஞாயிறு, மழை என இயற்கை வாழ்த்துவதாக அமைந்த நூல்_____

சிலப்பதிகாரம்

*10.* நிலவின் குளிர்ச்சியையும் கதிரவனின் வெம்மையையும் மழையின் பயனையும் போற்றும் நூல்_______

சிலப்பதிகாரம்

புத்தக வினாக்கள்

*1.* கழுத்தில் சூடுவது______

தார்

*2.* கதிரவனின் மற்றொரு பெயர்_____

ஞாயிறு

*3.* பிரித்து எழுதுக

வெண்குடை=வெண்மை+குடை

பொற்கோட்டு=பொன்+கோட்டு

4. சேர்த்து எழுதுக

கொங்கு+அலர்=கொங்கலர்

அவன்+அளிபோல்=அவ னளிபோல்

காணி நிலம்

நூல்வெளி

1. காணிநிலம் நூலாசிரியர்____

பாரதியார்

2. இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞர்_______

பாரதியார்

3. பாரதியாரின் இயற்பெயர்______

சுப்பிரமணியன்

4. பாரதியாருக்கு பாரதி பட்டம் வழங்கியவர்______

எட்டயபுர மன்னர்

5. தன் கவிதைகள் வழியாக விடுதலை உணர்வை ஊட்டியவர்______

பாரதியார்

6. மண் உரிமைக்காகவும் பெண் உரிமைக்காகவும் பாடியவர்_____

பாரதியார்

7. பாரதியாரின் நூல்கள்____, _____, _____

பாஞ்சாலி சபதம், கண்ணன் பாட்டு, குயில் பாட்டு

8. காணிநிலம் ____ என்னும் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது

பாரதியார் கவிதைகள்

9. முத்துச்சுடர் போலே ___ வீச வேண்டும்

நிலவொளி

10. "காணி நிலம் வேண்டும் பராசக்தி காணி நிலம்" வேண்டும் பாடல் ஆசிரியர்____

பாரதியார்

சொல்லும் பொருளும்

1. காணி- நில அளவை குறிக்கும் சொல்

2. மாடங்கள்-மாளிகையின் அடுக்குகள்

3. சித்தம்-உள்ளம்

புத்தக வினாக்கள்

1. கிணறு என்பதை குறிக்கும் சொல்___

கேணி

2. ”சித்தம் ”பொருள்____

உள்ளம்

3. மாடங்கள் என்பதன் பொருள் மாளிகையின் ___

அடுக்குகள்

4. பிரித்து எழுதுக

நன்மாடங்கள்=நன்மை+மாடங்கள்

நிலத்தினிடையே=நிலத்தின்+இடையே

5. சேர்த்து எழுதுக

முத்து+சுடர்=முத்துச் சுடர்

நிலா+ஒளி=நிலாவொளி

6. பொருத்துக

1. முத்துச்சுடர் போலே-நிலவொளி
2. தூய நிறத்தில்-மாடங்கள்
3. சித்தம் மகிழ்ந்திட-தென்றல்

**உரைநடை உலகம்**

சிறகின் ஓசை

1. பறவைகள் இடம் பெயர்தலை_____என்பர்

வலசை போதல்

2. _____பறவைகளே பெரும்பாலும் வலசை போகின்றன

நீர்வாழ் பறவைகள்

3. ____, ____, ____, _____ஆகியவற்றிற்காக பறவைகள் இடம் பெயர்கின்றன

உணவு, இருப்பிடம், தட்பவெப்பநிலை மாற்றம், இனப்பெருக்கம்

4. ____, ____, ____ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே பறவைகள் இடம் பெயர்கின்றன

நிலவு , விண்மீன், புவியீர்ப்பு புலம்

5. வளர்ச்சியின் போது பறவையின் உடலில் ஏற்படும் மாற்றங்கள்

____, ___, ____

தலையில் சிறகு வளர்தல், இறகுகளின் நிறம் மாறுதல், உடலில் கற்றையாக முடி வளர்தல்

6. சிறகடிக்காமல் கடலையும் தாண்டி பறக்கும் பறவை_____

கப்பல் பறவை

7. தரையில் இறங்காமல் 400 கிலோ மீட்டர் வரை பறக்கும் பறவை_____

கப்பல் பறவை

8. கப்பல் பறவையின் வேறு பெயர்கள்____

கப்பல் கூழைக்கடா, கடற்கொள்ளை பறவை

9. "நாராய் நாராய் செங்கால் நாராய்" என்னும் பாடலை எழுதியவர்____

சத்திமுத்தப் புலவர்

10. "தென்திசைக் குமரிஆடி வடதிசைக்கு ஏகுவீர் ஆயின்" என்னும் அடிகள்____ பற்றி கூறுகிறது

பறவைகள் வலசை வந்த செய்தி

11. சிட்டுக்குருவி வாழாத பகுதி_____

துருவப் பகுதி

12. இமயமலைத் தொடரில்_____உயரத்தில் கூட சிட்டுக்குருவி வாழ்கின்றன

4000 மீட்டர்

13. சிட்டுக்குருவிகள் நாள்_____

10-13 ஆண்டுகள்

14. "காக்கை குருவி எங்கள் சாதி" என்று பாடியவர்____

பாரதியார்

15. இந்தியாவின் பறவை மனிதர்____

சலீம் அலி

16. சிட்டுக்குருவியின் வீழ்ச்சி யாருடைய வாழ்க்கை வரலாறு

சலீம் அலி

17. மனிதன் இல்லாத உலகில் பறவைகள் வாழ முடியும், பறவைகள் இல்லாத உலகில் மனிதன் வாழ முடியாது என்று கூறியவர்____

சலீம் அலி

18. உலகிலேயே நெடுந்தொலைவு பயணம் செய்யும் பறவை_____

ஆர்டிக் ஆலா

19. ஆர்டிக் ஆலா பயணம் செய்யும் தொலைவு_______

22000km

20. பறவை பற்றிய படிப்பு_____

ஆர்னித்தாலஜி

21. உலக சிட்டுக்குருவிகள் நாள்

___

மார்ச் 20

புத்தக வினாக்கள்

1. பிரித்து எழுதுக

தட்பவெப்பம்= தட்பம்+ வெப்பம்

வேதியுரங்கள்=வேதி +உரங்கள்

2. சேர்த்து எழுதுக

தரை+இறங்கும்=தரையிறங்கும்

வழி+தடம்=வழித்தடம்

3. பறவைகள் வலசை போவதை பற்றி பாடிய தமிழ் புலவர்______

சத்திமுத்தப் புலவர்

விரிவானம்-கிழவனும் கடலும்

*1.* கிழவனும் கடலும் என்னும் நூலின் ஆசிரியர்_____

எர்னெஸ்ட் ஹெமிங்வே

*2.* கிழவனும் கடலும் எந்த ஆண்டு நோபல் பரிசைப் பெற்றது

*1954*

## இயல் *3*

### அறிவியல் ஆத்திச்சூடி

*1.* அகரவரிசையில் அறிவுரைகளைச் சொல்லும் இலக்கியம்_____

ஆத்திச்சூடி

*2.* புதிய ஆத்திச்சூடியின் ஆசிரியர்_____

பாரதியார்

*3.* அறிவியல் ஆத்திச்சூடி என் ஆசிரியர்______

நெல்லை சு முத்து

*4.* ஆத்திச்சூடியின் ஆசிரியர்____

ஔவையார்

5. அறிவியல் சிந்தனை ஒரு ஆய்வில் மூழ்கி என்னும் பாடலின் ஆசிரியர்____

நெல்லை சு முத்து

சொல்லும் பொருளும்

1. இயன்றவரை-முடிந்தவரை
2. ஒருமித்து-ஒன்றுபட்டு
3. ஔடதம் -மருந்து

நூல்வெளி

1. தம்மை ஒத்த அலைநீளத்தில் சிந்திப்பவர் என்று மேதகு அப்துல் கலாம் அவர்களால் பாராட்டப் பெற்றவர்______

நெல்லை சு முத்து

2. நெல்லை சு முத்து பணியாற்றிய நிறுவனங்கள்_______, _____, _____

விக்ரம் சாராபாய் விண்வெளி மையம், சதீஷ் தவான் விண்வெளி மையம், இந்திய விண்வெளி மையம்

3. நெல்லை சு முத்து_____மேற்பட்ட நூல்களை வெளியிட்டுள்ளார்

எண்பது

புத்தக வினாக்கள்

1. உடல் நோய்க்கு____தேவை

ஔடதம்

2. நண்பர்களுடன்_____விளையாடு

ஒருமித்து

3. பிரித்து எழுதுக

கண்டறி-கண்டு+அறி

ஓய்வற=ஓய்வு+அற

4. சேர்த்து எழுதுக

ஏன்+என்று=ஏனென்று

ஔடதம் +ஆம்=ஔடதமாம்

5. எதிர்ச் சொற்களை பொருத்துக

1. அணுகு -விலகு

2. ஐயம்-தெளிவு

3. ஊக்கம்-சோர்வு

4. உண்மை-பொய்மை

## அறிவியலால் ஆள்வோம்

1. "வானை அளப்போம் கடல் மீனை அளப்போம்"பாடலின் ஆசிரியர்____

பாரதியார்

2. மனிதன் எப்போதும் உண்மையே_____

உரைக்கின்றான்

3. பிரித்து எழுதுக

ஆழ்கடல்=ஆழ்+கடல்

விண்வெளி=வீண்+வெளி

4. சேர்த்து எழுதுக

நீலம்+வான்= நீலவான்

இல்லாது+இயங்கும்=இல்லாதியங்கும்

## உரைநடை உலகம்

## கணியனின் நண்பன்

1. ரோபோ என்னும் சொல்லை முதன் முதலில் பயன்படுத்தியவர்_____

காரல் கபெக்

2. காரல் கபெக் எந்த நாட்டை சேர்ந்தவர்

___

செக்

3. ரோபோ என்ற சொல்லுக்கு____என்று பொருள்

அடிமை

4. எந்திர மனிதர்களுக்கும் தானியங்கி களுக்கும் உள்ள வேறுபாடு_____ செயற்கை நுண்ணறிவு

5. உலக சதுரங்க வெற்றியாளர் கேரி கேஸ்பரோவ் என்பவரை தோற்கடித்த மீத்திறன் கணினி பெயர்_____

டீப் புளூ

6. உலகிலேயே முதன் முதலாக ரோபோவுக்கு குடியிருமை வழங்கிய நாடு_____சவுதி அரேபியா

7. ஐக்கிய நாடுகள் சபை______பட்டத்தை சோபியாவுக்கு வழங்கியுள்ளது

புதுமைகளின் வெற்றியாளர்

## புத்தக வினாக்கள்

1. நுட்பமாக சிந்தித்து அறிவது____

நுண்ணறிவு

*2.* தானே இயங்கும் எந்திரம்______

தானியங்கி

*4.* பிரித்து எழுதுக

*1.* நின்றிருந்த-நின்று+இருந்த

*2.* அவ்வுருவம்- அ+உருவம்

*5.* சேர்த்து எழுதுக

*1.* மருத்துவம்+துறை-மருத்துவத்துறை

*2.* செயல்+இழக்க-செயலிழக்க

*6.* நீக்குதல் எதிர்ச்சொல்____

சேர்த்தல்

*7.* எளிது எதிர்ச்சொல்___

அரிது

*8.* தானியங்கிகளுக்கும் இயந்திரம் மனிதர்களுக்கும் இடையே உள்ள முக்கிய வேறுபாடு_______

செயற்கை நுண்ணறிவு

ஒளி பிறந்தது

*1.* ஒளி பிறந்தது என்னும் தலைப்பில் யாருடன் நேர்காணல் நடந்தது?

அப்துல் கலாம்

*2.* குழந்தைகளிடமும், மாணவர்களிடமும் மிகுந்த அன்பு காட்டியவர் யார்?

அப்துல் கலாம்

*3.* அப்துல்கலாம் அவர்களின் புகைப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்டு இருக்கும் இடம் எது?

கலாம் அரங்கு

*4.* எந்த வயதில் அப்துல் கலாம் அவர்களுக்கு அறிவியல் மீது ஆர்வம் வந்தது?

*10*

*5.* அப்துல் கலாம் அவர்களுக்கு அறிவியல் மீது ஆர்வம் ஏற்படக் காரணமாக இருந்த ஆசிரியர்?

அறிவியல் ஆசிரியர்

*6.* அப்துல் கலாம் அவர்களுக்கு தமிழில் மிகவும் பிடித்த நூல் எது?

திருக்குறள்

*7.* அப்துல் கலாம் அவர்களுக்கு வாழ்க்கைக்கு வலு சேர்த்த குரல் எது?

அறிவுஅற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்

உள்ளழிக்க ஆகா அரண்

*8.* எந்த நூலைப் படித்த பொழுது அறிவு, தன்னம்பிக்கை, மகிழ்ச்சி ஆகிய மூன்றையும் பெற்றதாக அப்துல் கலாம் கூறுகிறார்?

விளக்குகள் பல தந்த ஒளி

*9.* அப்துல்கலாம் அவர்களுக்கு அறிவு , தன்னம்பிக்கை, மகிழ்ச்சி

ஆகிய மூன்றையும் பெற்று தந்த அந்த நூலை எழுதியவர் யார்?

லிலியன் வாட்சன்

*10.* அப்துல் கலாம் அவர்கள் பெரிதும் மகிழ்ந்த நிகழ்வு எது?

கார்பன் இழையை கொண்டு முன் *300* கிராமில் செயற்கைக்கால் உருவாக்கப்பட்டது

*11.* எந்த பல்கலைக்கழகத்தில் இருந்தது போல நூறு வருடங்களுக்கு பிறகு கல்வி முறை வலுவானதாக இருக்கும் என்று அப்துல்கலாம் அவர்கள் கூறுகிறார்?

நாளந்தா பல்கலைக்கழகம்

*12.* அறிவியலின் அடிப்படை எது?

கேள்வி கேட்கின்ற மனப்பான்மை

*13.* உலகின் முதல் விஞ்ஞானியாக அப்துல்கலாம் யாரை குறிப்பிடுகிறார்?

குழந்தைகள்

*14.* வெற்றியை அடையும் வழிகளாக *:1.* "அறிவை வளர்க்கும் அனைவரும் பேச்சையும் கவனியுங்கள்

*2.* "வியர்வை ! வியர்வை! வியர்வை ! என்ற கூற்றை கூறியவர் யார்?

அப்துல் கலாம்

*15.* "கனவு காணுங்கள் "என்ற பொன்மொழிக்கு சொந்தக்காரர் யார்?

அப்துல் கலாம்

*15.* தேசிய அறிவியல் நாள் எப்பொழுது?

***February 28***

*16.* ராமன் விளைவு கண்டுபிடிக்கப்பட்ட ஆண்டு?

*1928 feb 28*

*17.* ராமன் விளைவை கண்டுபிடித்தவர் யார்?

சர் சி வி ராமன்

*18.* ராமன் அவர்களுக்கு நோபல் பரிசைப் பெற்றுத் தந்த கேள்வி எது?

கடல் ஏன் நீல நிறமாக காட்சியளிக்கிறது

*19.* ராமன் அவர்களுக்கு எந்தக் கடலில் செல்லும் பொழுது கடல் நீர் நீல ஏன் நிறமாக காட்சி அளிக்கின்றது என்ற வினா எழுந்தது?

மத்திய தரைக்கடல்

*20.* எந்த ஆண்டு ராமன் அவர்கள் இங்கிலாந்துக்கு கப்பல் பயணம் மேற்கொண்டார்?

*1921*

## ஆறாம் வகுப்பு தமிழ் இரண்டாம் பருவம்

# இயல் 1

### மூதுரை

1. மூதுரையின் ஆசிரியர்____

**ஔவையார்**

2. "மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்" பாடலின் ஆசிரியர்____

**ஔவையார்**

### சொல்லும் பொருளும்

1. மாசற-குற்றம் இல்லாமல்
2. சீர் தூக்கின்- ஒப்பிட்டு ஆராய்ந்தால்
3. தேசம்- நாடு

### நூல்வெளி

1. ஔவையாரின் நூல்கள்___, ____, ___

**ஆத்திசூடி, கொன்றை வேந்தன், நல்வழி**

2. "மூதுரை" பொருள்___

**மூத்தோர் கூறும் அறிவுரை**

3. சிறந்த அறிவுரைகளை கூறும் நூல்____

**மூதுரை**

*4.* மூதுரை பாடல்களின் எண்ணிக்கை_

***31***

புத்தக வினாக்கள்

*1.* மாணவர்கள் நூல்களைக்___ கற்க வேண்டும்

**மாசற**

*2.* பிரித்து எழுதுக

இடமெல்லாம்- **இடம் + எல்லாம்**

மாசற- **மாசு+அற**

*3.* சேர்த்து எழுதுக

குற்றம்+இல்லாதவர்- **குற்றமில்லாதவர்**

சிறப்பு+உடையார்- **சிறப்புடையார்**

## துன்பம் வெல்லும் கல்வி

*1.* துன்பம் வெல்லும் கல்வி ஆசிரியர் பெயர்____

**பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்**

*2.* "படித்ததோடு இருந்து விடாதே" என்னும் பாடலின் ஆசிரியர்___

**பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்**

சொல்லும் பொருளும்

*1.* தூற்றும்படி- **இகழும்படி**

2. மூத்தோர்- **பெரியோர்**

3. மேதைகள்- **அறிஞர்கள்**

4. மாற்றார்- **மற்றவர்**

5. நெறி- **வழி**

6. வற்றாமல்-**குறையாமல்**

நூல்வெளி

1. எளிய தமிழில் சமூக சீர்திருத்தக் கருத்துக்களை வலியுறுத்திப் பாடியவர்____

**பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்**

2. திரை இசைப் பாடல்களில் உழைப்பாளிகளின் உயர்வை போற்றியவர்____

**பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்**

3. மக்கள் கவிஞர் என்னும் சிறப்புப் பெயரால் அழைக்கப் படுபவர்__

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

புத்தக வினாக்கள்

1. மாணவர்கள் பிறர்____நடக்கக் கூடாது

**தூற்றும் படி**

2. நாம்___சொல்படி நடக்க வேண்டும்

**மூத்தோர்**

3. பிரித்து எழுதுக

கைப்பொருள்- **கை+ பொருள்**

4. சேர்த்து எழுதுக

மானம்+இல்லா- **மானமில்லா**

உரைநடை உலகம்-கல்விக்கண் திறந்தவர்

1. கல்விக்கண் திறந்தவர் என்று அழைக்கப்படுபவர்____

**காமராசர்**

2. காமராசரை கல்விக்கண் திறந்தவர் என்று அழைத்தவர்____

**பெரியார்**

3. பெரியார் காமராசரை எவ்வாறு அழைத்தார்____

**கல்விக்கண் திறந்தவர்**

4. காமராசரின் சிறப்பு பெயர்கள் 6?

**பெருந்தலைவர் , கர்மவீரர் , கருப்பு காந்தி, படிக்காத மேதை, ஏழை பங்காளன் , தலைவர்களை உருவாக்குபவர்**

5. மாநிலம் முழுவதும் அனைவருக்கும் இலவச கட்டாய கல்வி என்ற சட்டத்தை இயற்றியவர்____

**காமராசர்**

6. மதிய உணவு திட்டத்தை கொண்டு வந்தவர்___

**காமராசர்**

7. பள்ளிகளில் ஏற்றத்தாழ்வின்றி குழந்தைகள் கல்வி கற்க_திட்டத்தை

காமராசர் கொண்டு வந்தார்

**சீருடை**

*8.* மதுரைப் பல்கலைக்கழகத்திற்கு யார் பெயர் சூட்டப்பட்டுள்ளது___

**காமராசர்**

*9.* நடுவண் அரசு காமராசருக்கு எப்போது பாரத ரத்னா விருது வழங்கியது____

***1976***

*10.* சென்னை உள்நாட்டு விமான நிலையத்திற்கு யார் பெயர் சூட்டப்பட்டுள்ளது

**காமராசர்**

*11.* கன்னியாகுமரியில் காமராசருக்கு எப்போது மணிமண்டபம் அமைக்கப்பட்டது____

*2. 10. 2000*

*12.* யாருடைய பிறந்த நாள் கல்வி வளர்ச்சி நாளாகக் கொண்டாடப்படுகிறது

**காமராசர்**

*13.* கல்வி வளர்ச்சி நாள்____

**ஜூலை 15**

புத்தக வினாக்கள்

*1.* பள்ளிக்கூடம் செல்லாததற்கு ஆடுமேய்க்கும் சிறுவர்கள் கூறிய காரணம்___

**ஊரில் பள்ளிக்கூடம் இல்லை**

*2.* பிரித்து எழுதுக

பசியின்றி- **பசி+ இன்றி**

படிப்பறிவு- **படிப்பு+ அறிவு**

3. சேர்த்து எழுதுக

காடு+ஆறு- **காட்டாறு**

## விரிவானம்- நூலகம் நோக்கி

1. ஆசியாவிலேயே இரண்டாவது மிகப்பெரிய நூலகம்____

**அண்ணா நூற்றாண்டு நூலகம்**

2. ஆசியாவிலேயே இரண்டாவது மிகப்பெரிய நூலகம் எங்கு உள்ளது__

**சென்னை**

3. ஆசியாவிலேயே மிகப் பெரிய நூலகம் எங்கு உள்ளது____

**சீனா**

4. அண்ணா நூற்றாண்டு நூலகம் தரை தளத்தோடு எத்தனை அடுக்கு கொண்டது_

**8**

5. அண்ணா நூற்றாண்டு நூலகம் பரப்பளவு___

**8 ஏக்கர்**

6. நூலக விதிகளை உருவாக்கியவர்___

**ரா அரங்கநாதன்**

7. இந்திய நூலகவியலின் தந்தை ___

ரா அரங்கநாதன்

8. தரை தளம்__, __

**சொந்த நூல் பதிப்பகம், பிரெய்லி நூல்கள்**

9. முதல் தளம்___, ___

**குழந்தைகள் பிரிவு , பருவ இதழ்கள்**

10. இரண்டாம் தளம்____

**தமிழ் நூல்கள்**

11. மூன்றாம் தளம்

**கணினி அறிவியல், தத்துவம் , அரசியல் நூல்கள்**

12. நான்காம் தளம்

**பொருளியல் , சட்டம் , வணிகவியல் , கல்வி**

13. ஐந்தாம் தளம்

**கணிதம், அறிவியல், மருத்துவம்**

14. ஆறாம் தளம்

**பொருளியல் , வேளாண்மை, திரைப்படக் கலை**

15. ஏழாம் தளம்

**வரலாறு, சுற்றுலா, அரசு கீழ்த்திசை சுவடி நூலகம்**

16. எட்டாம் தளம்

**கல்வி தொலைக்காட்சி, நூலகத்தின் அலுவலக பிரிவு**

17. நூலகத்தில் படித்து உயர் நிலையை அடைந்தவர்கள் சிலர்

**அண்ணா, ஜவஹர்லால் நேரு, அம்பேத்கர், காரல் மார்க்ஸ்**

18. சிறந்த நூல்களுக்கு_விருது வழங்கப்படுகிறது

**ச. ரா. அரங்கநாதன் விருது**

# இயல் 2

## ஆசாரக்கோவை

1. ஆசாரக் கோவையின் ஆசிரியர்____

**பெருவாயின் முள்ளியார்**

2. "நன்றி யறிதல் பொறையுடைமை சொல்லோடு" எனும் ஆசாரக்கோவை பாடலின் ஆசிரியர்_

**பெருவாயின் முள்ளியார்**

சொல்லும் பொருளும்

1. நன்றியறிதல்-**பிறர் செய்த உதவியை மறவாமை**
2. ஒப்புரவு-**எல்லாரையும் சமமாகப் பேணுதல்**
3. நட்டல்-**நட்புக் கொள்ளுதல்**

நூல்வெளி

1. பெருவாயின் முள்ளியார் பிறந்த ஊர்____

**கயத்தூர்**

2. ஆசாரக்கோவை பொருள்____

**நல்ல ஒழுக்கங்களின் தொகுப்பு**

3. ஆசாரக்கோவை___நூல்களுள் ஒன்று

**பதினெண்கீழ்க்கணக்கு**

4. ஆசாரக்கோவை எத்தனை வெண்பாக்களைக் கொண்டது____

**100**

புத்தக வினாக்கள்

1. பிறரிடம் நான்___பேசுவேன்

**இன்சொல்**

2. பிறர் நமக்கு செய்யும் தீங்கை பொறுத்துக் கொள்வது____ஆகும்

**பொறை**

3. சேர்த்து எழுதுக

அறிவு+உடைமை- **அறிவுடைமை**

இவை+எட்டும்- **இவையெட்டும்**

4. பிரித்து எழுதுக

நன்றியறிதல்- **நன்றி+ அறிதல்**

பொறையுடைமை- **பொறை+ உடைமை**

## கண்மணியே கண்ணுறங்கு

சொல்லும் பொருளும்

1. நந்தவனம்- **பூஞ்சோலை**

2. பார்- **உலகம்**

3. பண்- **இசை**

4. இழைத்து- **பதித்து**

தொகைச் சொற்களின் விளக்கம்

1. முத்தேன்- **கொம்புத்தேன் மலைத்தேன் கொசுத்தேன்**

2. முக்கனி-**மா பலா வாழை**

3. முத்தமிழ்-**இயல் இசை நாடகம்**

நூல்வெளி

1. தாலாட்டு___இலக்கியங்களில் ஒன்று

**வாய்மொழி**

2. தால் என்பதன் பொருள்

**நாக்கு**

3. பிரித்து எழுதுக

தாலாட்டு- **தால் + ஆட்டு**

4. குழந்தையின் அழுகையை நிறுத்த தூங்க வைக்கவும் இனிய இசையுடன் பாடும் பாடல்__

**தாலாட்டு**

புத்தக வினாக்கள்

1. பிரித்து எழுதுக

1. பாட்டிசைத்து- **பாட்டு+ இசைத்து**

2. கண்ணுறங்கு- **கண்+ உறங்கு**

2. சேர்த்து எழுதுக

வாழை+இலை- **வழைஇலை**

கை+அமர்த்தி- **கையமர்த்தி**

3. உதித்த எதிர்ச்சொல்____

**மறைந்த**

உரைநடை உலகம்-தமிழர் பெருவிழா

1. ____வணங்குவது தமிழரின் மரபு

**இயற்கை**

2. பொங்கல் திருநாள் எவ்வாறெல்லாம் அழைக்கப்படுகிறது, ,

**தமிழர் திருநாள், அறுவடை திருவிழா, உழவர் திருநாள்**

3. கதிரவனுக்கு நன்றி கூறும் நாள்

**பொங்கல் விழா**

4. இந்திரனுக்கு நன்றி கூறும் நாள்____

**பொகி பண்டிகை**

5. பொங்கல் திருநாள்___முதல்____நாட்கள் வரை கொண்டாடப்படுகிறது

**இரண்டு முதல் நான்கு நாள்**

6. "பழையன கழிதலும் புதியன புகுதலும்" நூலின் பெயர்___

**நன்னூல்**

7. வாழ்க்கைக்கு வளம் தரும் மழை கடவுளை வழிபடும் நாள்____

**இந்திர விழா**

8. மார்கழி மாதத்தின் இறுதி நாள்

**போகி திருநாள்**

9. தை மாதத்தின் முதல் நாள்____

பொங்கல் திருநாள்

10. பொங்கல் என்பது பொருள்____

பொங்கிப் பெருகி வருவது

11. தை முதல் நாள்___தொடங்குகிறது

**திருவள்ளுவர் ஆண்டு**

12. தை இரண்டாம் நாள்____கொண்டாடப்படுகிறது

**திருவள்ளுவர் நாள்**

13. மாடு என்னும் சொல்லின் பொருள்

**செல்வம்**

14. திருவள்ளுவர் பிறந்த ஆண்டு___

**கிமு 31**

15. திருவள்ளுவர் ஆண்டைக் கணக்கிட நடைமுறை ஆண்டு உடன்____கூட்டிக் கொள்ளவேண்டும்

31

16. மஞ்சுவிரட்டு வேறு பெயர்கள்

**மாடு பிடித்தல், ஜல்லிக்கட்டு, ஏறு தழுவுதல்**

17. இயற்கை , உழைப்பு, நன்றி உணர்வு , பண்பாடு ஆகியவற்றைப் போற்றும் விழா___

**பொங்கல் விழா**

18. ஆந்திரா , கர்நாடகம் மராட்டியம் , உத்தரபிரதேசம் ஆகிய மாநிலங்களில் அறுவடைத் திருநாள் எவ்வாறு கொண்டாடப்படுகிறது____

**மகர சங்கராந்தி**

19. பஞ்சாப்-**லோரி**

20. குஜராத் , ராஜஸ்தான்____

**உத்தராயன்**

புத்தக வினாக்கள்

1. கதிர் முற்றியதும்____செய்வர்

**அறுவடை**

2. விழாக்காலங்களில் வீட்டின் வாயிலில் மாவிலையால்____கட்டுவர்

**தோரணம்**

3. சேர்த்து எழுதுக

பொங்கல்+அன்று-பொங்கலன்று

4. பிரித்து எழுதுக

போகிப் பண்டிகை- போகி + பண்டிகை

5. பழையன கழிதலும்___புகுதலும்

**புதியன**

6. பச்சைப் பசேலென்ற வயல் காண இன்பம் தரும் பட்டுப்போன மரத்தை காண ____தரும்

**துன்பம்**

## விரிவானம்

## மனம் கவரும் மாமல்லபுரம்

1. நரசிம்மவர்மனின் வேறு பெயர்___

**மாமல்லன்**

2. மற்போரில் சிறந்தவர்___

**நரசிம்மவர்மன்**

3. மாமல்லன் காலம்___

**ஏழாம் நூற்றாண்டு**

4. மாமல்லபுரத்தில் காண வேண்டிய இடங்கள்

**அர்ஜுனன் தபசு , கடற்கரை கோவில், பஞ்ச பாண்டவர் ரதம், ஒற்றைக் கல் யானை , குகைக்கோயில், புளிகுகை, திருக்கடல்மல்லை , கண்ணனின் நவெண்ணெய் பந்து, கலங்கரை விளக்கம்**

*5.* மாமல்லபுரம் எத்தனை தலைமுறைகள் இல் உருவாக்கப்பட்டது____

***4***

*6.* மாமல்லன் தந்தை பெயர்____

**மகேந்திரவர்ம பல்லவர்**

*7.* அர்ஜுனன் தபசு வேறு பெயர்____

**பகீரதன் தவம்**

*8.* சிற்பக்கலை எத்தனை வகைப்படும் அவை யாவை____

***4***

**குடைவரைக்கோயில் , ஒற்றைக்கல் கோயில் , கட்டுமான கோயில் , புடைப்பு சிற்பங்கள்**

*9.* மாமல்லபுரத்தின் தற்போதைய பெயர்____

**மகாபலிபுரம்**

# இயல் *3*

## நானிலம் படைத்தவன்

*1.* நானிலம் படைத்தவன் ஆசிரியர்____

**முடியரசன்**

*2.* "அஞ்சாமை மிக்க வந்தான் ஆனாலும் சான்றோர்கள் அஞ்சுவதை அஞ்சி விலகி விடுவான் "ஆசிரியர்____

**முடியரசன்**

**சொல்லும் பொருளும்**

1. மல்லெடுத்த-வலிமை பெற்ற
2. சமர்-போர்
3. நல்கும்-தரும்
4. கழனி-வயல்
5. மறம்-வீரம்
6. எக்களிப்பு- பெரும் மகிழ்ச்சி
7. கலம்-கப்பல்
8. ஆழி-கடல்

**நூல்வெளி**

1. முடியரசன் இயற்பெயர்

**துரைராசு**

2. முடியரசனின் நூல்கள்

**பூங்கொடி , வீரகாவியம், காவியப் பாவை**

3. திராவிட நாட்டின் வானம்பாடி என்று அழைக்கப்படுபவர்

**முடியரசன்**

4. நானிலம் படைத்தவன் எந்த நூலில் இடம் பெற்றுள்ளது

**புதியதொரு விதி செய்வோம்**

கற்பவை கற்றபின்

1. கங்கை நதிப்புறத்துக் கோதுமைப் பண்டம் ஆசிரியர்

**பாரதியார்**

**புத்தக வினாக்கள்**

1. போர்க்களத்தில் வெளிப்படும் குணம்___

**வீரம்**

2. பிரித்து எழுதுக

கல்லெடுத்து - கல்+ எடுத்து

நானிலம்- நான்கு+ நிலம்

3. சேர்த்து எழுதுக

நாடு+என்ற- நாடென்ற

கலம்+ஏறி- கலமேறி

## கடலோடு விளையாடு

**நூல்வெளி**

1. உழைக்கும் மக்கள் தன் காலத்தை மறக்க உற்சாகத்தோடு பாடும் பாடல்____

**நாட்டுப்புற பாடல்**

*2.* நாட்டுப்புற பாடல் வேறு பெயர்___

**வாய்மொழி இலக்கியம்**

*3.* நாட்டுப்புற இயல் ஆய்வு தொகுத்தவர்____

**சு சக்திவேல்**

*4.* நெய்தல் திணை

நிலம்____

கடலும் கடல் சார்ந்த இடமும்

மக்கள்____

**பரதவர் பரத்தியர்**

தொழில்____

**மீன்பிடித்தல் உப்பு விளைவித்தல்**

பூ____

**தாழம்பூ**

**புத்தக வினாக்கள்**

*1.* பிரித்து எழுதுக

கதிர்ச்சுடர்- கதிர்+ சுடர்

மூச்சடக்கி-மூச்சு+ அடக்கி

2. சேர்த்து எழுதுக

பெருமை+வானம்-பெருவானம்

அடிக்கும்+அலை- அடிக்குமலை

**பொருத்துக**

1. விடிவெள்ளி -விளக்கு
2. மணல்- பஞ்சு மெத்தை
3. புயல் -ஊஞ்சல்
4. பனி மூட்டம் -போர்வை

உரைநடை உலகம்-வளரும் வணிகம்

1. பொருளை விற்பவர் ______

**வணிகர்**

2. பொருளை வாங்குபவர்____

**வருவோர்**

3. நெல்லைக் கொடுத்து____பெற்றனர்

**உப்பை**

4. ஆட்டின் பாலைக் கொடுத்து ___பெற்றனர்

**தானியத்தை**

5. வணிகத்தின் வகைகள்

**தரை வழி வணிகம் , நீர் வழி வணிகம்**

*6.* "தன் நாடு விளைந்த வெண்ணெல் தந்து பிறநாட்டு உப்பின் கொள்ளை சாற்றி" நூல் பெயர்___

**நற்றினை**

*7.* "பாலொடு வந்து கூழொடு பெயரும்" நூல் பெயர்____

**குறுந்தொகை**

*8.* "பொன்னொடு வந்து கறியொடு பெயரும்"நூல் பெயர்____

**அகநானூறு**

*9.* தமிழ்நாட்டின் தலைசிறந்த துறைமுகம்___

**பூம்புகார்**

*10.* துறைமுக நகரங்கள்___என்றும்___என்றும் அழைக்கப்பட்டன

**பட்டினம், பாக்கம்**

*11.* அன்றாட தேவைக்கான பொருட்களை விற்பவர்

**சிறு வணிகர்**

*12.* நுகர்வோரோடு நேரடி தொடர்பு கொள்பவர்கள்

**சிறு வணிகர்**

*13.* தமிழ்நாட்டில் இருந்து ஏற்றுமதி செய்யப்பட்டவை

**தேக்கு, மயில் தோகை, அரிசி, சந்தனம் , இஞ்சி , மிளகு**

*14.* அரேபியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவை

**குதிரை**

*15.* சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டவை

**கண்ணாடி , கற்பூரம், பட்டு**

16. "நடுவு நின்ற நன்னெஞ்சினோர்" மற்றும் "கொள்வதும் மிகை கொளாது கொடுப்பதும் குறைபடாது" இடம்பெற்றுள்ள நூல்

**பட்டினப்பாலை**

17. பொருள்களை வண்டிகளை ஏற்றிக்கொண்டு வெளியூருக்கு செல்லும் குழுவை எவ்வாறு அழைப்பர்

**வணிக சாத்து**

**புத்தக வினாக்கள்**

1. சேர்த்து எழுதுக

வணிகம்+சாத்து-வணிகச் சாத்து

பண்டம்+மாற்று-பண்டமாற்று

2. பிரித்து எழுதுக

மின்னணு- மின் + அணு

விரிவடைந்த- விரிவு+ அடைந்த

## விரிவானம் –உழைப்பே மூலதனம்

1. "பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்து வைக்காதே"யார் கூற்று____

**ஔவையார்**

# ஆறாம் வகுப்பு மூன்றாம் பருவம்

## இயல் 1

**பாரதம் அன்றைய நாற்றங்கால்**

1. பாரதம் அன்றைய நாற்றங்கால் ஆசிரியர் ?

**தாராபாரதி**

2. பூமியின் கிழக்கு வாசல் ?

**இந்திய நாடு**

3. தேசம் உடுத்திய நூலாடை ?

**திருக்குறள்**

4. காளிதாசரின் பாடல்கள் எங்கே எதிரொலிக்கும் ?

**காவிரிக்கரை**

5. கம்பர் என் கவிதைகளுக்கு இசையமைப்பது ?

**கங்கை ஆறு**

7. அறத்தின் ஊன்றுகோல் ?

**காந்தியடிகளின் அகிம்சை என்னும் சிறிய கைதடி**

சொல்லும் பொருளும்

1. மெய் -உண்மை
2. தேசம்-நாடு

**நூல்வெளி**

1. தாராபாரதியின் இயற்பெயர்?

**ராதாகிருஷ்ணன்**

2. கவி ஞாயிறு என்னும் அடைமொழி பெற்றவர்

**தாராபாரதி**

3. தாராபாரதி நூல்கள் 3 ______, ______, _____

**புதிய விடியல் , இது எங்கள் கிழக்கு , விரல்நுனி வெளிச்சங்கள்**

4. பாரதம் அன்றைய நாற்றங்கால் இடம்பெற்றுள்ள தொகுப்பு?

**தாராபாரதியின் கவிதைகள்**

**புத்தக வினாக்கள்**

1. பிரித்து எழுதுக

நூலாடை-நூல்+ஆடை

2. சேர்த்து எழுதுக

எதிர்+ஒலிக்க -எதிரொலிக்க

3. கலைக் கூடமாக காட்சி தருவது

## உரைநடை உலகம்

1. ஜியு போப் எழுதிய எந்த நூல் காந்தியை கவர்ந்தது

**தமிழ் கையேடு**

2. கவர்ந்த நூல்கள்___, ____

**தமிழ் கையேடு, திருக்குறள்**

3. இந்தப் பெரியவரின் அடி நிழலிலிருந்து தமிழ் கற்க வேண்டும் என்னும் ஆவல் உண்டாகிறது என்று கூறியவர்

**காந்தி**

4. இந்தப் பெரியவரின் அடி நிழலிலிருந்து தமிழ் கற்க வேண்டும் எனும் ஆவல் உண்டாகிறது என்று யாரை பற்றி காந்தி கூறினார்

**உ வே சாமிநாதர்**

**புத்தக வினாக்கள்**

1. காந்தியடிகளிடம் உடை அணிவதில் மாற்றத்தை ஏற்படுத்திய ஊர்

**மதுரை**

2. காந்தியடிகள்____அடி நிழலில் இருந்து தமிழ் கற்க வேண்டும் என்று விரும்பினார்

**உ வே சாமிநாதர்**

## விரிவானம்

## வேலு நாச்சியார்

1. சிவகங்கையின் மன்னர்

**முத்து வடுகநாதர்**

2. ராமநாதபுரத்தின் மன்னர்

**செல்லமுத்து**

*3.* எங்கு நடைபெற்ற போரில் முத்துவடுகநாதர் கொல்லப்பட்டார்

**காளையார் கோவில்**

*4.* வேலுநாச்சியாரின் அமைச்சர்

**தாண்டவராயர்**

*5.* வேலு நாச்சியாரின் தளபதிகள்

**பெரிய மருது சின்ன மருது**

*6.* வேலு நாச்சியாரின் படை தலைவர்

**மருது சகோதரர்கள்**

*7.* வேலு நாச்சியாரின் படை பிரிவுக்குத் தலைவர்

**குயிலி**

*8.* வேலு நாச்சியாரின் காலம்

***1730-1796***

*9.* வேலு நாச்சியார் சிவகங்கையை மீட்க ஆண்டு

***1780***

*10.* ஜான்சி ராணிக்கு முன்பே ஆங்கிலேயரை எதிர்த்து வீரப்போர் புரிந்தவர்

**வேலு நாச்சியார்**

# இயல் *2*

**பராபரக்கண்ணி**

1. பராபரக்கண்ணி ஆசிரியர்

**தாயுமானவர்**

2. வாழ்வியல் நெறிகளையும் ஒழுக்கங்களையும் விளக்குபவை

**அற இலக்கியங்கள்**

3. தம்முயிர் போல் எவ்வுயிரும் தான் என்று தண்டருள்கூர் ஆசிரியர்

**தாயுமானவர்**

சொல்லும் பொருளும்

1. தண்டருள்-குளிர்ந்த கருணை
2. கூர் -மிகுதி
3. செம்மையருக்கு-சான்றோருக்கு
4. ஏவல்-தொண்டு
5. பராபரமே-மேலான பொருளே
6. பணி-தொண்டு
7. எய்தும்-கிடைக்கும்
8. எல்லாரும்-எல்லா மக்களும்
9. அல்லாமல்-அதைத் தவிர

**நூல்வெளி**

1. திருச்சியை ஆண்ட விஜயரகுநாத சொக்கலிங்கர் இடம் தலைமைக்

கணக்கராக பணிபுரிந்தவர்

**தாயுமானவர்**

*2.* பராபரக்கண்ணி எந்த நூலில் இடம் பெற்றுள்ளது

**தாயுமானவர் பாடல்கள்**

*3.* தமிழ்மொழியின் உபநிடதம்

**தாயுமானவர் பாடல்கள்**

*4.* கன்னி என்பது எத்தனை அடிகளில் பாடும் பாடல்

***2***

**புத்தக வினாக்கள்**

***1.* சேர்த்து எழுதுக**

தம்+உயிர்- தம்முயிர்

இன்புற்று+இருக்க- இன்புற்றிருக்க

*2.* பிரித்து எழுதுக

தானென்று- தான்+என்று

*3.* சோம்பல் எதிர்ச்சொல்

**சுறுசுறுப்பு**

## நீங்கள் நல்லவர்

*1.* நீங்கள் நல்லவர் ஆசிரியர்

**கலீல் கிப்ரான்**

*2.* கொடுப்பது பழத்தின் இயல்பு பெறுவது வேறு இயல்பு ஆசிரியர்

**கலீல் கிப்ரான்**

*3.* சொல்லும் பொருளும்

சுயம்-தனிதன்மை

உள்ளீடுகள் -உள்ளே இருப்பவை

**நூல்வெளி**

*1.* கலீல் கிப்ரான் எந்த நாட்டைச் சேர்ந்தவர்

**லெபனான் நாடு**

*2.* தீர்த்தகிரி நூலை மொழி பெயர்த்தவர்

**புவியரசு**

**புத்தக வினாக்கள்**

*1.* பரிசு பெறும் போது நம் மனநிலை ____ இருக்கும்

**மகிழ்ச்சி**

*2.* வாழ்வில் உயர கடினமாக____வேண்டும்

**உழைக்க**

## பசிப்பிணி போக்கிய பாவை

*1.* தனி ஒருவனுக்கு உணவு இல்லை எனில் ஜகத்தினை அழித்திடுவோம் என்று கூறியவர்

**பாரதியார்**

*2.* ஆபுத்திரன் கையில் இருந்தது

**அமுதசுரபி**

*3.* அமுதசுரபி தோன்றும் நாள்

**வைகாசித் திங்கள் முழுநிலவு நாள்**

*4.* அமுத சுரபியை கையில் எடுத்தவர்

**மணிமேகலை**

*5.* கோ பொருள்

**பசு**

*6.* முகி என்றால்

**முகம்**

*7.* பசுவின் முகம் போன்ற அமைந்திருப்பதால்___பெயர் பெற்றது

**கோமுகி**

*8.* அமுத சுரபியில் உண விட்டவர்

**ஆதிரை**

*9.* மணிமேகலா தெய்வம் மணிமேகலை எங்கு அழைத்துச் சென்றது

**மணிபல்லவத் தீவு**

**பாதம்**

*1.* எஸ் ராமகிருஷ்ணன் எழுதிய நூல்கள் *4* ___, ____, ____, ____

**உப பாண்டவம், கதாவிலாசம் , தேசாந்திரி, கால் முளைத்த கதைகள்**

*2.* தாவரங்களின் உரையாடல் என்னும் சிறுகதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது____

**பாதம்**

*3.* அன்பில் இன்பம் காண்போம் அரசியலில் நேர்மை காண்போம் ஆசிரியர்

**அ முத்தரையனார்**

## இயல் *3*

## ஆசிய ஜோதி

*1.* ஆசிய ஜோதி ஆசிரியர்

**கவிமணி தேசிய விநாயகம்**

*2.* யாருடைய யாகத்திற்காக ஆடுகள் கொண்டு செல்லப்பட்டன

**பிம்பிசாரர் மன்னர்**

*3.* வாழும் உயிரை வாங்கி விடல் இந்த மண்ணில் எவருக்கும் எளிதாகும் ஆசிரியர்

**கவிமணி தேசிய விநாயகம்**

*4.* சொல்லும் பொருளும்

*1.* அஞ்சினர்-பயந்தனர்

*2.* கருணை-இரக்கம்

*3.* வீழும்-விழும்

*4.* ஆகாது-முடியாது

*5.* நீள்நிலம்-பரந்த உலகம்

*6.* முற்றும்-முழுவதும்

*7.* மாரி-மழை

8. கும்பி-வயிறு

9. பூதலம்-பூமி

10. பார்-உலகம்

**நூல்வெளி**

1. முப்பத்தாறு ஆண்டுகள் பள்ளி ஆசிரியராகப் பணியாற்றியவர்

**தேசிக விநாயகனார்**

2. கவிமணி பட்டம் பெற்றவர்

**தேசிய விநாயகனார்**

3. ஆசியஜோதியின் ஆசிரியர்

**தேசிய விநாயகனார்**

4. லைட் ஆஃப் ஆசியா என்னும் நூலைத் தழுவி எழுதப்பட்டது

**ஆசிய ஜோதி**

5. புத்தரின் வரலாற்றைக் கூறும் நூல்

**லைட் ஆஃப் ஆசியா**

6. லைட் ஆஃப் ஆசியா நூலின் ஆசிரியர்

**எட்வின் அர்னால்டு**

**புத்தக வினாக்கள்**

1. புத்தரின் வரலாற்றைக் கூறும் நூல்

**ஆசிய ஜோதி**

2. நேர்மையான வாழ்வு வாழ்பவர்

**எல்லா உயிர்களிடத்தும் இரக்கம் கொண்டவர்**

3. ஒருவர் செய்ய கூடாதது

தீவினை

4. பிரித்து எழுதுக

எளிதாகும் -எளிது+ ஆகும்

பாலையெல்லாம்- பாலை+ எல்லாம்

# மனிதநேயம்

1. இல்லாதவருக்கு கொடுத்து மகிழ்வது

**ஈகை**

2. எல்லா உயிர்களிடமும் அன்பு செலுத்துதல்___

**மனித நேயம்**

3. தமக்கென முயலா நோன்றால்- பிறர்க்கென முயலுநர் உண்மையானே

**புறநானூறு**

4. சத்திய தருமச்சாலையில் நிறுவியவர்

**வள்ளலார்**

5. வாடிய பயிரை கண்டபோதெல்லாம் வாடினேன்?

**வள்ளலார்**

6. அமைதிக்கான நோபல் பரிசை பெற்றவர்

**அன்னை தெரசா**

7. வாழ்க்கை என்பது நீ சாகும் வரை அல்ல மற்றவர் மனதில் நீ வாழும் வரை என்று கூறியவர்

**அன்னை தெரசா**

*8.* குழந்தைகளை பாதுகாப்போம் இயக்கத்தை தொடங்கியவர்

**கைலாஷ் சத்யார்த்தி**

*9.* குழந்தைகளை தொழிலாளர்களாக மாற்றுவது மனிதத் தன்மைக்கு எதிரான குற்றம்

**கைலாஷ் சத்யார்த்தி**

*10.* உலக குழந்தைகள் கல்வி உரிமைக்காக *103* நாடுகளில் *80000* கிலோ மீட்டர் நடைபயணம் சென்றவர்

**கைலாஷ் சத்யார்த்தி**

*11.* முப்பது ஆண்டுகளில்____குழந்தை தொழிலாளர்களை மீட்டு உள்ளார்

***86000***

## புத்தக வினாக்கள்

*1.* தன் பொருளை கவர்ந்தவரிடமும் அன்பு காட்டியவர்

**வள்ளலார்**

*2.* அன்னை தெரசாவுக்கு___கான நோபல் பரிசு கிடைத்தது

**அமைதி**

*3.* கைலாஷ் சத்யார்த்தி தொடங்கி இயக்கம்

**குழந்தைகளை பாதுகாப்போம்**

***4.* பொருத்துக**

வள்ளலார்-பசிப்பிணி போக்கியவர்

கைலாஷ் சத்யார்த்தி-குழந்தைகள் உரிமைக்கு பாடுபட்டவர்

அன்னை தெரசா-நோயாளிகளிடம் அன்பு காட்டியவர்

## முடிவில் ஒரு தொடக்கம்

1. மனிதநேயத்தின் மகத்தான சாதனையாக மகனின் துடிக்கும் இதயத்தை கொடையாக தந்த பெற்றோர்

**அசோகன் -புஷ்பாஞ்சலி**